[30th June 1962

THE HON. SRI V. RAMAIAH: The proposal is under the consideration of the Government along with the other proposals for introducing revised administrative set up in the District consequent on estate areas in the District being settled and converted into ryotwari areas.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, என் தொகுதியானது—ஊத்தங்கரைத் தொகுதியானது—முன்பு சப் தாலுக்காவாக இருந்தது. அதை மாற்றி தாலுக்காவாகச் செய்யப் போவதாக முன்பே பிரகடனம் செய்யப்பட்டிருந்தது. இதுவரை அவ்வாறு செய்யப்படவில்லை. அப்படி நடவடிக்கை எடுத்துக் கொள்ளாத காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER: It is a different question altogether.

நாட்டாண்மைக் கழக மருத்துவ மனைகள்.

* *64* **கேள்வி.—திரு. ரா. சு. வீரப்ப செட்டியார்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மாவட்ட நாட்டாண்மைக் கழகங்கள் எடுபட்ட பின்பு அவைகளின் பராமரிப்பில் இருந்துவந்த கிராம மருத்துவ மனைகள் அல்லாத மருத்துவ மனைகளின் பராமரிப்பு அமைப்பைப் பற்றி அரசினர் என்ன முடிவு எடுத்துள்ளனர்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Under the Madras Panchayats Act, 1958, former District Board hospitals have come to vest in the Government while former District Board dispensaries have come to vest in the Panchayat Union Councils concerned.

திரு. ம. கமலநாதன்: சர்க்காரிலே எடுத்துக்கொள்ளப்பட்ட ஆஸ்பத்திரியிலே டாக்டர்கள் இல்லாத குறையை உடனே நிவர்த்திக்க முடியுமா என்று அறிய விரும்புகின்றேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: முன்பே நான் இதற்குப் பதில் சொல்லியிருக்கிறேன்.

திரு. ம. கமலநாதன்: ஜில்லா போர்டு ஆஸ்பத்திரிகளை பஞ்சாயத்து யூனியனுக்கு மாற்றிய பிறகு அந்த உத்யோகங்களுக்குக் கவர்ச்சிகரமான சம்பளம் கொடுத்தாலொழிய நல்ல டாக்டர்கள் அதற்குக் கிடைப்பது அரிது. இதை அனுபவத்தில் பார்த்து வருகிறோம். ஆகவே டாக்டர்களுக்கு அதிகச் சம்பளம் கொடுக்க பஞ்சாயத்து யூனியன்கள் முன்வந்தால் அனுமதி அளிக்கப்படுமா? அப்படிக் கொடுக்க அரசாங்கம் ஒரு ஏற்பாடு செய்து கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்போது பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலுடைய நிலைமையை ஆராய்ந்து அதற்கேற்றபடி முயற்சி செய்துகொண்டிருக்கிறோம்.